# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 01.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 1495/A/2023 (SA 6300/A/2023)**

திரு.ஆர்.இராமகிருஷ்ணன் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.ஆர்.இராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.த.மலர்<br>பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), திருப்பூர் அவர்கள் ஆஜராகவில்லை<br><br>தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)-ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது.<br><br>திரு.க.மாரிமுத்து,<br>துணை வட்டாட்சியர் / தலைமை உதவியாளர், ஆ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 06.02.2023 |

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கோப்பு ந.க.எண்.12096/2017/ஜே1 கோப்பு முழுவதும் (அலுவலக குறிப்புடன்) சான்றிட்ட நகலுடன் 5 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 15.02.2023 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 05.03.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | 13.03.2023 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 04.04.2023 |
| **26.09.2023 நாளிட்ட ஆணையின் விவரம்:-** ***இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரர் கோரியவாறு இனம் 3-க்கு உரிய தகவல்களைப் பிரிவு 7(6)-ன் கீழ் எவ்விதக்கட்டணமின்றி, ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பிவிட்டு, அதனை அவர் பெற்றுக்கொண்டார் என்பதற்கான ஆதாரத்தினை இணைத்து அறிக்கை ஒன்றை இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு இத்துடன் முற்றாக்கப்படுகிறது..*** | |
| ஆணை நிறைவேற்றாமை மனு நாள் | 29.10.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலரின் சார்பாக ஆஜரான திரு.க.மாரிமுத்து, துணை வட்டாட்சியர் / தலைமை உதவியாளர், ஆ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ந.க.2796/2023/ஜே1, 15.02.2023, ந.க.20877/2023/ஜே1, 25.10.2023 மற்றும் ந.க.19314/வழக்கு எண்.NC 1495/2024/ஜே1, 26.09.2024 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலராலும், மூ.மு.5438/2023/ஜே1, 13.03.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் இன்றைய தின விசாரணைக்கு ஆஜராகி, தனது கருத்தை எடுத்துரைக்கத் தவறிய நிலையில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது, எனவே, ***பொதுத்தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இவ்வாணை நிறைவேற்றாமை மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்யப்பட்டு இவ்வாணையத்தால் ஆணையிடப்படுகிறது***.

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 1495/A/2023 (SA 6300/A/2023)</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத்தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் - 641 604.

**<u>மனுதாரர்</u>**

திரு.ஆர்.இராமகிருஷ்ணன்
80/1, ஆர்.கே. இல்லம்,
8வது மெயின் ரோடு,
குருசாமி நகர்,
வடவள்ளி,
பாரதியார் பல்கலைக்கழகம் அஞ்சல்
கோயம்புத்தூர் - 641 046.

Copy to file

KRM/PA 09.07.2026